தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

ஆணை எண்.42/பேரூ/2021

நாள் 22.11.2021

திரு. வெ. பெத்தூரன்,
ஆதிபட்டி, தேனி மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
பூதிப்புரம் பேரூராட்சி ... எதிர்மனுதாரர்

தேனி மாவட்டம், பூதிப்புரம் அஞ்சல், ஆதிபட்டி, நெ.24, மெயின் ரோடு என்ற முகவரியைச் சேர்ந்த வெ. பெத்தூரன் என்பவரது 08.06.2021 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 09.06.2021 அன்று பெறப்பட்டு 42/2021 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தேனி மாவட்டம், பூதிப்புரம் அஞ்சல், ஆதிபட்டி, நெ.24, மெயின் ரோடு என்ற முகவரியில் வசிக்கும் திரு. வி. பெத்தூரன் என்பவர் அளித்துள்ள 8.6.2021 நாளிட்ட புகார் மனுவில் பூதிப்புரம் பேரூராட்சிக்குட்பட்ட ஆதிபட்டி கிராமம் முழுவதுமே பட்டியல் இனத்தவர்கள்தான் குடியிருந்து வருகின்றனர் என்றும், கிராமத்தில் இன்னும் எத்தனையோ மண்ரோடுகளும், சாக்கடை இல்லாத பல தெருக்களும் உள்ளதாகவும், மழைக்காலங்களில் மக்கள் சேற்றில்தான் நடந்து செல்கின்றனர் என்றும், இதையெல்லாம் பூதிப்புரம் பேரூராட்சி செயலர் அலுவலரிடம் பலமுறை சுட்டிக்காட்டியும், செயல் அலுவலர் அவரது சுயநலத்திற்காக எந்தவிதமான சேதாரமும் ஆகாமல் உடைக்கக்கூட முடியாத மிகவும் பலமாக இருந்த சாக்கடையை உடைத்தெடுத்துவிட்டு அதில் மீண்டும் சாக்கடை அமைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். அதுவும் வேலை துவங்கியதிலிருந்து வேலை

முடியும்வரை தொழில்நுட்ப உதவியாளர், இளநிலை பொறியாளர், உதவி செயற் பொறியாளர் மற்றும் செயல் அலுவலர் என யாருமே வரவில்லை என்றும், பழைய சாக்கடை தோண்டிய பள்ளத்தை வேலைமுடிந்த பின்னர் இன்றளவும் இன்னமும் நிரப்பவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், முல்லையாற்றிலிருந்து தங்கள் கிராமத்திற்கு தண்ணீர் வந்து ஒரு வருடத்திற்கு மேலாகிவிட்டது என்றும், பேரூராட்சிக்கு அனைத்து வரிகளையும் நிலுவையில்லாமல் தாங்கள் கட்டிவருகின்றபோதும், தங்களுக்கு ரோடு வசதி, குடிநீர் வசதி செய்து தராமல், தனியாருக்குச் சொந்தமான பாதையை உருவாக்கி அங்கு புதிதாக அரசு செலவில் 100 மீட்டர் அளவுக்கு தார் சாலை அமைத்திருக்கிறார்கள் என்றும், இந்த 100 மீட்டர் தார்சாலையை அமைக்க நன்றாக இருந்த ரோட்டையே 1 கி.மீ அளவுக்கு புதுப்பித்தும் இருக்கிறார்கள் என்றும், இது குறித்து தான் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் தகவல் கேட்டதற்கு தமக்கு எந்தத் தகவலும் அளிக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். அதேமாதிரி பூதிப்புரத்தில் கல்குவாரிக்குச் செல்லும் தார் சாலையை ஒரு வருடம்கூட ஆகாத நிலையில் திரும்பப் போடுகிறார்கள். ஆனால் தங்கள் ஊரில் இன்னும் மண்சாலைகளே நிறைய உள்ளன. தங்கள் ஊரில் அமைந்துள்ள ஒரே ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இடிந்துவிழும் நிலையில் உள்ளதாகவும், அதன் புகைப்பட நகலையும் இணைத்துள்ளதோடு, அது இடிந்து விழுவதற்குள் இன்னொரு தொட்டி கட்டினால்தான் தங்கள் ஊருக்கு குடிநீர் ஆதாரம் கிடைக்கும் என்றும், எனவே தனது புகார்கள் குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு ஆணையினை பிறப்பிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. பூதிப்புரம் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர்களை 15.9.2021 அன்று இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 16.8.2021 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. முறையீட்டு மனுதாரர் மற்றும் பூதிப்புரம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர் 15.9.2021 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளனர்:-

3. முறையீட்டு மனுதாரர் திரு. வெ. பெத்தூரன் 15.09.2021 அன்று இம்முறைமன்ற நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தனது வாக்குமூலத்தில் "பூதிப்புரம் பேரூராட்சிக்குட்பட்ட ஆதிபட்டி கிராமத்தில் மழைக்காலங்களில் அங்குள்ள மக்கள் சகதியில் நடந்தும், அதனைக் கடந்தும் மிகவும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். அதே போன்று எங்களது பகுதியில் மிகவும் பழுதடைந்த சாலைகளை சரிசெய்யாமல், நன்றாக உள்ள சாலைகளை உடைத்து அங்கு மீண்டும் சாலைகளை அமைத்து வருகின்றனர். இதனால், பேரூராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுகிறது. மேலும், அப்பகுதியில் உள்ள சாக்கடைகளின் இருபுறங்களிலும் தோண்டப்பட்ட குழிகள் மூடப்படாமல் இருந்து வந்தது. மக்களின் குறைகளைக் கேட்காமல் இருந்த பேரூராட்சி அலுவலர்கள் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட எனது மேல்முறையீட்டு மனுவினையொட்டி மேற்கண்ட பகுதியில் குழாய் அமைத்தும், சாலைகளை மேம்படுத்த மதிப்பீடு தயார்செய்தும் வருகின்றனர். அதே போன்று ஒரு குறிப்பிட்ட இடத்தைத் தவிர மற்ற இடங்களில் சாக்கடை பழுது நீக்கம் செய்யப்பட்டுவிட்டது. குறிப்பிட்ட சாக்கடை பழுதினை சரிசெய்திடவும், தேவையான இடங்களில் சாலை வசதிகளை மேம்படுத்திடவும் பேரூராட்சிக்கு தேவையான

அறிவுறுத்தல்களை வழங்குமாறு இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

4. பூதிப்புரம் பேரூராட்சி செயல் அலுவலர் 15.09.2021 அன்று நடைபெற்ற இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தனது வாக்குமூலத்தில் "பூதிப்புரம் பேரூராட்சி ஆதிப்பட்டி கிராமத்தில் உள்ள சாலை TURIF 2019-2020 திட்டத்தின்கீழ் கல் குவாரிக்குச் செல்லும் சாலை அமைக்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. பழுதடைந்த சாலைகள் செப்பனிடப்பட்டு வருகின்றன. மேலும், மேற்கண்ட பகுதியில் விளக்குகள் அமைந்திடவும், சாக்கடைகளின் இருபுறங்களிலும் உள்ள குழிகளை அடைத்திடவும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டது. அப்பகுதியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மிகவும் பழுதடைந்துள்ள நிலையில் உள்ளதால், 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு உள்ள அத்தொட்டியை நீக்கி, ஒரு லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டியை அமைத்திட பேரூராட்சியால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த நீண்ட அறிக்கை மற்றும் அங்கு நடைபெற்ற பணிகள் தொடர்பான புகைப்படங்களின் நகல்களை இம்முறைமன்றத்தின் முன் சமர்ப்பிக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

5. பூதிப்புரம் பேரூராட்சி செயல் அலுவலர் வாக்குமூலத்துடன் சமர்ப்பித்துள்ள 15.09.2021 நாளிட்ட அறிக்கையில் பூதிப்புரம் பேரூராட்சி ஆதிபட்டி கிராமத்தில் காலனிக்குச் செல்லும் சாலையில் TURIF 2019-2020 திட்டத்தின்கீழ், தார்ச்சாலை அமைக்கும் பணி நடைபெற்று வந்த நிலையில், மேற்படி வார்டு–6 ஆதிபட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி அருகில் உள்ள விரிவாக்கம் சாலை பகுதியில் நகர் ஊரமைப்புத் துறைமூலம் தனி மனைப்பிரிவு அனுமதி வழங்கப்பட்டு, மேற்படி மனைப்பிரிவுகளுக்கு பேரூராட்சி மூலம் அனுமதி வழங்கப்பட்டு, வீடுகள் கட்டப்பட்டுள்ளது. மனுதாரர் குறிப்பிட்டுள்ளவாறு தனியருக்குச் சொந்தமான பாதையில் 100 மீட்டர் சாலை தார்ச்சாலை அமைக்கப்படவில்லை. மேற்படி சாலை, சாலை பதிவேடு பக்கம் எண்.196–இன்படி ஆதிபட்டி குறுக்குத் தெரு, ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி என பதிவுகள் உள்ள சாலை. மேற்படி பதிவேட்டின்படி 200 மீட்டருக்கு தார்ச்சாலை அமைக்கப்பட்டுள்ளது. மேலும், IUDM 2019-2020 திட்டத்தின்கீழ் விநாயகர் கோவில் முதல் கொட்டக்குடி ஆறு வரை மழைநீர் வடிகால் அமைக்கும் பணி முடிவுற்றுள்ளது. மேற்படி வடிகால் பள்ளங்களில் மண் நிரப்பப்பட்டு நல்ல முறையில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது என்று செயல் அலுவலர், பூதிப்புரம் பேரூராட்சி தெரிவித்துள்ளார்.

IUDM 2019-2020 திட்டத்தின்கீழ் ரூ.2.00 கோடியில் கல் குவாரிக்குச் செல்லும் சாலை அமைக்க ஒப்பந்தப்புள்ளி அக்டோபர் மாதத்தில் கோரப்பட்டது. அப்பொழுது மழைக்காலம் தொடங்கியதால் பணி நிறுத்தப்பட்டது. இவ்வேளையில், ஒப்பந்ததாரரின் தந்தையார் கொரோனா நோயில் பாதிக்கப்பட்ட காரணத்தினால் ஒப்பந்ததாரரால் கால அவகாசம் கோரப்பட்டது. மேலும் கோரோனா முழு ஊரங்கு காரணத்தினால், பணியாளர்கள் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்படவில்லை. இதனைத் தொடர்ந்து தேர்தல் காலம் வந்தது. தேர்தல் முடிந்தவுடன் பணி ஆரம்பிக்கப்பட்ட நிலையில்

கொரோனா காரணமாக பொது முடக்கத்தால் பணி நிறுத்தப்பட்டது. மேலும் ஒப்பந்ததாரரின் தந்தை கொரோனா நோயினால் மரணமடைந்ததால் ஒப்பந்ததாரரால் மீண்டும் கால அவகாசம் கோரப்பட்டது. இதுவரை அப்பணிக்காக தொகை ஏதும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படவில்லை. தற்போது ஒப்பந்ததாரரிடம் பணியினை ஆரம்பிக்க அறிவுறுத்தப்பட்டது. ஏற்கனவே நடைபெற்ற தார்சாலை பணி முடிக்கப்படாமல் நிறுத்தப்பட்டமையால் தற்போது மேற்படி பணி ஆரம்பிக்கப்படவுள்ளது. ஏற்கனவே போடப்பட்ட சாலையில் புதிதாக எவ்வித பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் பூதிப்புரம் பேரூராட்சி செயல் அலுவலர் குறிப்பிட்டுள்ளார்.

6. ஆதிபட்டி கொட்டக்குடி ஆற்றின் அருகில் உள்ள ஆழ்துளைக் கிணற்றிலிருந்து நீரானது எடுக்கப்பட்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் பொது மக்களுக்கு இதுவரை எவ்வித புகார்களுக்கும் இடமளிக்காமல் போதுமான அளவு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆதிபட்டி மற்றும் பூதிப்புரம் இடையில் தேசிய நெடுஞ்சாலை மூலம் புறவழிச் சாலையில் பாலம் வேலைகள் நடைபெற்று வருவதால் ஆதிபட்டிக்குச் செல்லும் முல்லைப் பெரியாறு குடிநீர் குழாய் இணைப்பு தற்காலிகமாக துண்டிக்கப்பட்டு மேற்படி பகுதிக்குச் செல்லும் மெயின் குழாய் இணைப்பு இணைக்கப்பட வாய்ப்பின்றி இருந்தது. தற்போது வேலை முடிவுற்ற நிலையில் , தற்போது முல்லை பெரியாறு மூலம் பெறப்படும் குடிநீர் பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பூதிப்புரம் பேரூராட்சியில் ஆதிபட்டியிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி 1990க்கு முன்பு கட்டப்பட்டதால், தற்போது பொறியாளர்கள் மற்றும் அரசு பொறியியல் கல்லூரி, போடிநாயக்கனூர் பொறியாளர் குழு பார்வையிட்டும் வழங்கிய சான்றிதழின் அடிப்படையில், அடிப்படை கட்டமைப்பு வசதிகள் திட்டம் 2020–2021ன்படி புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பூதிப்புரம் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

7. மேலும், பூதிப்புரம் பேரூராட்சியில் உள்ள 15 வார்டுகளில் அனைத்து சமுதாய பொது மக்களும் பயன்பெறும் வகையில், அடிப்படை கட்டமைப்பு வசதிகள் (Infrastructure and Basic Amenities) திட்டம் 2020–2021ம் ஆண்டில் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் 1.80 கி.மீ நீளத்திற்கு இரண்டு மழைநீர் வடிகால்கள், ரூ.13.00 லட்சம் மதிப்பீட்டில் 23 சிறுபாலங்கள் அமைத்தல், ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் 100 தெருவிளக்குகள் அமைத்தல், ரூ.60 லட்சம் மதிப்பீட்டில் 2.20 கி.மீ நீளத்திற்கான 21 தெருக்களில் சிறுசாலைகள் மற்றும் ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் ஒரு மயான மேம்பாடு ஆகிய பணிகள் மொத்தம் ரூ.225 லட்சம் மதிப்பீட்டிலான பணிகளுக்கு பேரூராட்சிகளின் இயக்குநரின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன என்று தெரிவித்துள்ளார். மேலும், பேரூராட்சியில் சாலைப் பதிவேடு, மழைநீர் பதிவேடு பராமரிக்கப்பட்டு சேதாரமான பணிகள் மட்டுமே புதிதாக கட்டப்பட்டு வருவதாகவும், பொதுமக்களின் கோரிக்கைகளை ஏற்று அவ்வப்போது பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று பூதிப்புரம் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

8. மேலும், மூலதன மாநில நிதி 2020–2021ன் கீழ் ரூ.34.50 லட்சம் மதிப்பீட்டில் 2.00 லட்சம் லிட்டர் கொள்ளளவுடன் பூதிப்புரம் அரசு மேல்நிலைப் பள்ளி அருகில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2020–2021 திட்டத்தின் கீழ் ஆதிப்பட்டியில் 1 லட்சம் லிட்டர் கொள்ளவுடனும், கோட்டைமேட்டுத் தெரு, பூதிப்புரத்தில் 2 லட்சம் லிட்டர் கொள்ளவுடன் ஒரு நீர்த்தேக்கத் தொட்டியும் ஆக மொத்தம் மூன்று மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் பழைய நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு பதிலாக அமைக்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும், பேரூராட்சி பகுதிகள் யாவும் பேவர் மெசின் கொண்டு சிறு பேருந்துகள் மற்றும் கனரக வாகனங்கள் செல்லுமாறு Morth – specification படி அமைக்கப்படுகின்றன. நகரில் உள்ள சாலைகளில் பேவர் மெசின் வந்து செல்லக்கூடியவை மட்டும் தார்ச் சாலையாகவும் ஏனையவை பேவர் பிளாக் மற்றும் சிமெண்ட் சாலையாக அமைக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது. புதிதாக வீடுகள் அமைந்து புதிதாக வளர்ச்சியடைந்த பகுதிகளாக உள்ள தெருக்களில் மட்டும் மண் சாலை உள்ளது. அதனை கருத்திற்கொண்டே, அடிப்படை வசதி திட்டத்தின் மூலம் மேற்குறிப்பிடப்பட்ட பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. புதிதாக மதிப்பீடுகள் தயார் செய்த காலங்களில் புதிதாக உருவான மண் சாலைகள் தற்போது அளவீடுகள் செய்து அரசின் நிதியின் மூலம் வரும் காலங்களில் பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும் தற்போதைய நிலையில் பேரூராட்சி சாலைகள் பதிவேட்டின்படி பேரூராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட சாலைகள் பேரூராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறதாகவும் பூதிப்புரம் பேரூராட்சி செயல் அலவலர் தெரிவித்துள்ளார். மேலும், பூதிப்புரம் பேரூராட்சி செயல் அலவலர் தமது அறிக்கையுடன் புகார் மனுதாரரால் குறிப்பிடப்பட்ட பணிகள் குறித்து மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு ஆதாரமாக அவற்றின் புகைப்பட நகல்கள் மற்றும் பேரூராட்சி நிர்வாகத்தினால் பல்வேறு திட்டங்களின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளுக்கான புகைப்பட நகல்களையும் தமது அறிக்கையுடன் சமர்ப்பித்துள்ளார்.

9. முறையீட்டு மனுதாரரின் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் அவர் அளித்துள்ள ஆவணங்கள் மற்றும் புகைப்படங்கள், பூதிப்புரம் பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம், அவரது அறிக்கை மற்றும் அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் புகைப்படங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரரின் புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள கோரிக்கைகளான தெரு விளக்குகள் அமைத்தல், சாக்கடைகளின் இருபுறங்களிலும் உள்ள குழிகளை மண்கொண்டு நிரப்பி சீர் செய்யும் நடவடிக்கைகள் பூதிப்புரம் பேரூராட்சியின் மூலம் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும், ஆதிபட்டியில் உள்ள பழுதடைந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை அகற்றிவிட்டு ஒரு லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திடவும் பூதிப்புரம் பேரூராட்சி நிர்வாகத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும், பூதிப்புரம் பேரூராட்சியால் மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வேறு திட்டங்கள் குறித்தும் அப்பேரூராட்சியின் செயல் அலுவலரது விரிவான அறிக்கையின் மூலமும் தெரியவருகிறது. மேலும், அவரது அறிக்கையுடன் அனுப்பப்பட்டுள்ள புகைப்படங்கள் மூலமாகவும் பூதிப்புரம் பேரூராட்சியால்

மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள், முடிக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் முன்னேற்றத்தில் உள்ள பணிகள் குறித்தும் தெளிவாக அறிய முடிகிறது. எனவே, பூதிப்புரம் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையினை ஏற்று, ஆதிப்பட்டியில் வசிக்கும் மக்களில் பெரும்பாலானவர்கள் பட்டியல் இனத்தவர்கள் என்பதால், அவர்களின் சமுதாய மேம்பாட்டினை ஊக்குவிக்கும் அவசியத்தினைக் கருதி, அப்பகுதிக்கான அடிப்படை வசதிகளான சாலை வசதி, குடிநீர் வசதி, கழிவுநீர் கால்வாய் வசதி, மின்விளக்கு வசதி ஆகியவற்றை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொண்டு நிறைவேற்றிடுமாறு பூதிப்புரம் பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2021ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 22-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒம்/-x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

பெறுநர்
திரு. வெ. பெத்தூரான்,
24, மெயின் ரோடு, ஆதிப்பட்டி, பூதிப்புரம் அஞ்சல்,
தேனி மாவட்டம்-625 531

செயல் அலுவலர், பூதிப்புரம் பேரூராட்சி,
தேனி மாவட்டம்-625 531

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

-/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/-

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை-600 032

29.11.21

செயலாளர்

29.11.21